## கவிதைக் காரோட்டி

என் கவிதை எனும் காரில்தான்
நான் வசிக்கிறேன்.
எனக்குச் சொந்தமாக ஒரு வீடில்லை.
கார்தான் எனக்கு வீடு.
காடுகள், கழனிகள், கிராமங்கள் , நகரங்கள்
தண்ணீர் கண்ட இடங்களில் நிறுத்தி
என் காரை கழுவத் தொடங்கி விடுகிறேன்.
என் கவிதைக்கார்
வானத்தையும், சூரியனையும், மேகங்களையும்
கண்ணாடிபோல் பிரதிபலிக்க வேண்டும் என்று
அடிக்கடி கழுவிச் சுத்தம் செய்து
மெழுகு தடவி பளபளப்பாக்குகிறேன்..
வெதுவெதுப்பான என் ரத்தத்தை எஞ்சினில்
எண்ணெயாக ஊற்றுகிறேன்.
என் காரின் இதயமான எஞ்சின் அதிகச் சூடாகிவிடாமல்
அடிக்கடி குளிர வைக்கிறேன்.
பழுதடைந்த பழைய எஞ்சினை மாற்றி
நவீன எஞ்சினைப் பொருத்துகிறேன்.
கவிதைக் காரில் வசிப்பதால்
எனக்கு நிலையான வேலை கிடைப்பதில்லை.
காருக்குள் இடப்பற்றாக்குறையால்
ஆடம்பர அலங்காரப் பொருட்களை எல்லாம்
நான் தூக்கி எறிந்து விட்டேன்.
நான் ஒரு கவிதை நாடோடி என்பதால்
நிறைய மக்களைச் சந்திக்கிறேன்.
அவர்கள் எனக்கு வேலை கொடுக்கிறார்கள்.

வாழ்க்கை கடினமாகத்தான் இருக்கிறது
ஆனால் நிறைய சாகசங்களோடு.
--- 15 செப்டம்பர் 2020

